## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.119/2012

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மல்லீஸ்வரி | மதம் | : இந்து |
| க/பெ | : சலபதி | ஜாதி | : -- |
| வயது | : 37 | கிராமம் | : அரும்பாக்கம் |
| தொழில் | : துப்புரவு தொழிலாளர் | வட்டம் | : திருத்தணி |

**20.01.2026**

**பி.வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 8ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பட்டா எண்.164ல் என் தாத்தா சரிதிகா பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.164ல் என் தாத்தா சரிதிகா பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. என் தந்தை ஜெயராமனுக்கு கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கொடுக்கப்பட்ட தகுதி அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். **(தகுதி அட்டை பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான செட்டில்மெண்ட் பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் பதிவேடு பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான அ பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அ பதிவேடு பி.வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான புல வரைபடம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(புல வரைபடம் பி.வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3.  என் கொள்ளு தாத்தா கதிர்காடு இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்றிதழ் பி.வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் தாத்தா பொன்னன் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்றிதழ் பி.வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் பாட்டி செங்கம்மாளின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்றிதழ் பி.வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான செட்டில்மெண்ட் அ பதிவேடு கிராம நிர்வாக அதிகாரி சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் அ பதிவேடு பி.வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 03.01.2012ம் தேதியிட்டு என் அப்பா கனகம்மாசத்திர காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் தாக்கல் செய்கிறேன். **(புகார் மனு பி.வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4.  இந்நீதிமன்ற அ.வ.எண்.55/2011ன் திருத்தப்பட்ட பிராதின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(பிராது பி.வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இந்நீதிமன்ற அ.வ.எண்.55/2011ன் தீர்ப்புரை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தீர்ப்புரை பி.வா.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இந்நீதிமன்ற அ.வ.எண்.55/2011ன் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தீர்ப்பாணை பி.வா.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 11.04.1975ம் தேதியிட்டு கங்கி ரெட்டிக்கு கோவிந்தப்ப நாயுடு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் மற்றும் அதன் தமிழ்மொழிபெயர்ப்பு தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 01.01.1975 முதல் 26.09.2025 வரையிலான வில்லங்க சான்று தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று பி.வா.சா.ஆ 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.164ல் என் தாத்தா சரிதிகா பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா பி.வா.சா.ஆ 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)